1 வெ(ற்)றி

வாழ்க்கையில் வெற்றிபெறத் துடிக்கும் இளைஞர்களுக்கு நல்வாழ்த்துகள். உங்களுக்கு அனைத்துச் செல்வங்களும் கிடைத்து உங்களால் வீடும், நம் நாடும் நன்மை பெறட்டும்.

நீங்கள் அன்றாட வாழ்க்கையில் பலபேரைச் சந்தித்து இருக்கலாம். அவர்களில் சிலர் எதையாவது சாதிக்க வேண்டும் என்பார்கள். எப்படி என்றால் தெரியாது. ஆனால், சாதிப்பேன் என்பார்கள். மன்னிக்கவும். இவர்களால் எதையும் சாதிக்க முடியாது. எதை நாம் அடைய வேண்டும் என்கிற தெளிவு இல்லாமல் வெற்றிபெற முடியும் என்பது சாத்தியமில்லை.

முதலில் நாம் எந்தத் துறையில் சாதிக்க வேண்டும், அத்துறைக்கும் நமக்கும் உள்ள ஈர்ப்பு எவ்வளவு? ஈர்ப்புக்கு வேண்டிய இலக்கு எது? அந்த இலக்குக்கும் நாம் இருக்கும் இடத்திற்கும் உள்ள இடைவெளி என்ன? இடைவெளியைக் குறைக்க நாம் செய்ய வேண்டிய யுக்திகள் என்ன? என்று தெளிவு ஏற்படுத்திக் கொண்டால், வெற்றி பெறுவதற்கு வழி கிடைத்துவிடும்.


இந்தத் தெளிவோடு தன்னம்பிக்கையுடனும், விடாமுயற்சியுடனும் அதாவது வெறியோடு கலந்த தீவிர முயற்சியோடும் இருந்தால் வெற்றிப்பதக்கம் நம் கையில்.

வாழ்க்கையில் வெற்றிபெற வேண்டுமானால் முதலில் எதையாவது ஒன்றை செய்யப் பழகிக் கொள்ளவேண்டும். சும்மா இருப்பது என்பது ஊருக்குப் புறத்தே நடப்பட்டிருக்கும் முட்டுக் கல்லுக்குச் சமம் என்பதை உணர்ந்துகொள். அந்தக் கல் எப்போதாயினும் பொய் பேசியிருக்கிறதா? இல்லை.

ஆயினும், அது எப்போதும் ஒரு கல்லாகவேதான் இருந்து கொண்டிருக்கிறது.

மனிதன் பொய் பேசுகிறான். ஆனால், அவனே பிறகு ஒரு மாமனிதராகவும், தெய்வமாகவும் ஆகிறான். எதுவாயினும் ஒன்றைச் செய்து கொண்டிரு. அதில் தவறு இருந்தாலும் கூடப் பரவாயில்லை. திருத்திக் கொள்ளலாம். ஒன்றுமே செய்யாமல் இருப்பதைக் காட்டிலும் எதையாவது செய்வதுமேல்.

ஒரு ஏழைக் குடும்பத்தில் பிறந்து, அதிகம் படிக்க முடியாமல் இருந்தும், வறுமை வாட்டியபோதிலும் மனத் திடத்துடன் சிறுவயது முதற்கொண்டே ஏதாவது ஒரு தொழிலைச் செய்து படிப்படியாக முன்னேறி பின்னர், இந்தியாவின் தலைசிறந்த தொழிலதிபராக உயர்ந்த திருபாய் அம்பானியின் வெற்றிக்கதையை நினைவூட்டுகிறேன். அரை டிராயர் போட்ட வயதிலேயே, தன் குடும்பத்தின் வருமானம் பற்றாக்குறையாக இருந்ததினால் வடை, போண்டா சுட்டு விற்றார். தன் கண் எதிரே தட்டுப்படுகிற வாய்ப்பை விடாமல் பற்றிக்கொள்ளும் சமயோசித புத்தி இருந்ததினால், கடன் பெற்றாவது தன் 17 ஆவது வயதிலேயே ஏமன் நாட்டில் பெட்ரோல் பங்கில் வேலை பார்த்தார். கடின உழைப்பு, வெறித்தனமாக முயற்சி, இவற்றால் ஓரளவிற்கு உயர்ந்து ஒரு சாதாரண துணி வியாபாரியாகத் தொழிலைத் தொடங்கித் தலைசிறந்த தொழிலதிபராக உயர்ந்தார். தளராத மன உறுதியுடனும், திறமையுடனும் தன் பணியைத் தொடர்ந்து செய்தால் வெற்றி அம்பானிக்கு மட்டுமல்ல, சப்பாணிக்கும் கிட்டும். உயரவேண்டும் என்ற ஆசை எனக்கு வெறித்தனமாக இருந்ததால்தான் என்னை வெற்றியாளனாக ஆக்க முடிந்தது என்று அவரே குறிப்பிடுகிறார். ஒரு பெட்ரோல் பங்கில் வண்டிகளுக்கு எரிபொருள் நிரப்புகிற ஊழியராகத் தன் வாழ்க்கையைத் தொடங்கிய ஒருவர் இந்தியப் பெட்ரோலியத் துறையின் தன்னிகரற்ற பெரும் சக்தியாக வளரக் காரணம் அவரிடம் இருந்த முன்னேற வேண்டும் என்கிற வெறி ஒன்றுதான்.



''வாழ்க்கையில் நாம் வெற்றி பெறுவதுதான் வெற்றியே தவிர பிறரைத் தோற்கடிப்பது வெற்றியாகாது.'' நம்மில் பல பேர் பிறரை தோல்வியுறச் செய்வதையே தன் இலட்சியமாகவும், அதை வெற்றியாகவும் கருதுகின்றனர்.

ஒரு குடும்பத்தில் உள்ள அனைவரும் மிக்க சந்தோசத்துடன் பால் பாயசம் வைத்து குடித்துக் கொண்டிருந்தனர். உறவினர் ஒருவர் வீட்டிற்குள் நுழைந்த பொழுது அவருக்கும் பாயசம் தரப்பட்டது. உடனே உறவினர், "இன்று பண்டிகை எதுவும் இல்லையே, உங்கள் திருமண நாளும் இல்லையே, யாருக்காவது பிறந்தநாள் கொண்டாட்டமா'' என்றார். குடும்பத்தினர் "அதெல்லாம் இல்லை. பக்கத்து வீட்டிற்கு லாட்டரியில் ஒருகோடி பரிசு விழுந்திருக்கிறது'' என்றனர். உடனே உறவுக்காரர் ருசிமிகுந்த மீதி பாயசத்தையும் குடித்து முடித்து பக்கத்து வீட்டின் சந்தோசத்தில் பங்குகொண்ட குடும்பத்தைப் பாராட்டத் தொடங்கினார். உடனே இடையில் குறுக்கிட்டுப் பேசிய அவர்கள் மகன் பதிலைக் கேட்டு உறவுக்காரர் ஊரைவிட்டே போய் விட்டார். அப்படி மகன் சொன்ன பதில் என்ன தெரியுமா? அந்த லாட்டரிச் சீட்டு காணாமல் போய் ஒரு மாதமாகியும் கிடைக்கவில்லையாம். ஹாஹா...?" என்று சிரித்தான்.

நாம் வெற்றி பெறுவது என்பது வேறு. பிறரைத் தோல்வியடையச் செய்வது என்பது வேறு. மற்றவர்கள் படும் துன்பத்திலும், தோல்வியிலும் மகிழ்ச்சி அடைவது வெற்றிவிழா கொண்டாடுவதும் தகாத செயலாகும். மற்றவர்களைப் பற்றி அதிகம் யோசிக்காதே! உன்னைப் பற்றியே யோசி. உன் வெற்றியைப் பற்றியே யோசி. வெற்றி அடைந்தே தீருவேன் என்று வெறித்தனமாக யோசி. நிச்சயம் வாழ்வில் வெற்றிப் பதக்கம் கிட்டும். இதுவும் சாத்தியம்.

●●●


2 உ(ழை)ப்பு

"உன் எண்ணம் விண்ணைத்தொட வேண்டும் என்றால் உன் வியர்வை மண்ணைத்தொட வேண்டும்." ஆம்! உணவுக்கு உப்பு இன்றியமையாதது போல நம் உயர்வுக்கு உழைப்பு இன்றியமையாதது என்பதை நாம் உணர்ந்து விட்டால் என்றும் வாழ்க்கை இனிமையாகிவிடும். நல்ல சிந்தனையோடு இணைந்த கடும் உழைப்பு ஒன்றுதான் வெற்றியின் நுழைவாயில்! நமது குறிக்கோளை அடைய வேண்டும் என்றால் உழைப்பால் மட்டும் முடியுமே தவிர, வெறும் எண்ணங்களாலோ, வார்த்தைகளாலோ அல்ல. எந்த ஒரு வெற்றியாளனும் உழைப்பைத் தன் செயலில் காட்டுவானே தவிர ஒரு செயலைச் செய்வதற்கு மாறாக பேசிக் கொண்டே இருக்க மாட்டான்.

தினமும் ஏன் இந்த ஓட்டம்? என்ற சலிப்புடன் கடிகாரத்தைப் பார்த்தேன். அது என்னிடம் கேட்டது 'நான் ஓடாவிட்டால் என்ன செய்வாய்?' நான் 'தூக்கி எறிந்து விடுவேன்' என்றேன். அதற்கு அது கூறியது 'நீயும் ஓடாவிட்டால் இந்த உலகம் உன்னைத் தூக்கி எறிந்து விடும்' என்றது.

உலகில் மனிதர்களை நாம் இரண்டுவிதமாகப் பிரிக்கலாம். பேசுபவர்கள் என்றும் உழைப்பவர்கள் என்றும். இதில் உழைப்பவர்களாலேயே உலகம் முன்னேறி வருகிறது. உழைப்பாளிகளின் கைவண்ணமே நமக்கு உணவாகவும், உடையாகவும், வீடாகவும் அமைகிறது.

படிப்பிலும் சரி, விளையாட்டிலும் சரி, தொழிலிலும் சரி, எதிலுமே வெற்றி பெற்றவர்கள் ஒரே முறையில் மேலே வந்தவர்கள் அல்ல. திட்டமிட்ட நெடுங்கால கடின உழைப்பு ஒன்றே அவர்களை வெற்றிபெற வைக்கிறது.



'மியூனிச்' தடகளப் போட்டியில் ஏழு தங்கப் பதக்கங்கள் வென்ற மார்க் ஸ்மீத் என்ற வீரரைப் பார்த்து பலரும், இன்று உங்களது அதிர்ஷ்ட நாள் என்று கூறினார்கள். ஆனால், மார்க் ஸ்மீத் கூறுகையில் 'நான் தினமும் எட்டு மணிநேரம் இதற்காக உழைத்தேன். அந்த உழைப்புக்குப் பெயர்தான் அதிர்ஷ்டம் என்றால் அதை நான் ஏற்றுக் கொள்கிறேன்' என்றார்.

இரவோடு இரவாக ஒரு விதை மரமானதும் இல்லை. அந்த மரத்தில் பழம் வந்ததும் இல்லை. பழத்தைச் சுவைத்தவர்களும் இல்லை. நாம் ஆசைப்படும் எதையும் விரைவில் அடைந்துவிட முடியாது. சாதனைகள் பல புரிய தாமதம் ஆகலாம். அதற்காகச் சலிப்பு ஏற்படவும் கூடாது. தொடர்ந்து நாம் உழைத்துக் கொண்டே இருக்க வேண்டும். உழைப்பின் பயன் உடனடியாகத் தெரியாமல் இருக்கலாம். அதற்காக உழைப்பை நிறுத்தி விடக்கூடாது.

"உப்பில்லாப் பண்டம் குப்பையிலே" இது பழமொழி. "உழைப்பில்லா மனிதன் திண்ணையிலே" இது புதுமொழி. எனவே, நம்மை முதலில் உழைப்பதற்குத் தயார் செய்துகொள்ள வேண்டும். நம்மை சுறுசுறுப்பாக, உற்சாகமாக இயக்கிக் கொண்டு நமது தகுதிகளை உயர்த்திக் கொண்டால் உறுதியாக வெற்றி

பெறலாம். தன் உழைப்பு ஒன்றே மூச்சாகக் கொண்டு தன் வாழ்க்கையைத் தொண்டனாகத் துவக்கி சத்தியமூர்த்தியிடம் பயிற்சிபெற்று பலகாலம் பின்னணியில் இருந்து தன்னைத் தயார் செய்து கொண்டதினால்தான் தலைவர்களுக்கே தலைவராக பெருந்தலைவர் காமராசரால் பொறுப்பு வகிக்க முடிந்தது.

நாம் பல நூல்களைத் தேடிப்பிடித்து அதைப்பற்றிய அறிவையும், அறிஞர்களிடமும், அந்தத்துறை வல்லுநர்களுடன் பழகுவதன் மூலமும் நம்மை தயார்படுத்திக் கொள்ளலாம். அதற்காகப் பணத்தையோ, நேரத்தையோ, தன் ஆசைகளையோ இழக்க நேரிடலாம். ஆனால், நாம் தொடர்ந்து இலக்குக்காக உழைத்துக் கொண்டே இருக்க வேண்டும்.

உழைப்பைப் பற்றிச் சொல்லும் பொழுது ஒரு சேல்ஸ் செமினாரில் பயிற்றுநர் கேட்ட கேள்விதான் ஞாபகத்திற்கு வருகிறது. நம் தேசத்தில் மிகவும் பணக்காரக் கோயில் எது என்றதுதான் தாமதம். எல்லோரும் ஒரே குரலில் திருப்பதி வெங்கடாசலபதி என்று பதில் கொடுத்தனர். பதிலுக்கு அவர் ஏன் ஏழுமலையான் மட்டும் பணக்காரர் ஆனார் சொல்ல முடியுமா? எனக் கேட்க ஆளாளுக்கு ஒரு பதில் சொன்னாங்க. அவங்க பதிலில் திருப்தி அடையாத பயிற்றுநர் சொன்னார்.

எத்தனையோ இடங்களில் பெருமாள் கோயில் உள்ளது. ஆனால், திருப்பதியில் மட்டும்தான் சாமி இரவு பன்னிரெண்டு மணிவரை பக்தர்களைப் பார்த்து ஆசிர்வதிக்கிறார். மீண்டும் அதிகாலையிலேயே மூன்று மணிக்கு எழுந்து தரிசனம் கொடுக்கிறார். பகலிலும் ஓய்வுகூட எடுப்பதில்லை. ஆனால், மற்ற கோயில்களில் இரவு ஒன்பது மணிக்கு நடை சாத்தப்படுகிறது. பகலிலும் ஓய்வு உண்டு. ஆகையால், கடுமையாக உழைத்தால்தான் செல்வம் பெருகும் என்பது கடவுளுக்கே பொருந்தும்போது நமக்கு பொருந்தாதா என்ன என்றார். கடவுளுக்கு பொருந்துதோ இல்லையோ காசு சம்பாதிக்க வேண்டுமானால் இரவு, பகலாக உழைக்க வேண்டும் என்பது உண்மை.


நாம் உழைப்பைப் பற்றி நினைக்கும்போது ஜப்பான் மக்களை யாரும் மறந்துவிடமுடியாது. ஹிரோஷிமாவிலும், நாகசாகியிலும் அமெரிக்க அணுகுண்டுத் தாக்குதல் நடத்திய சமயத்தில் பொதுநல அமைப்புகள் சோற்றுப் பொட்டலங்களைப் போட்டபோது எங்களுக்கு இனாமாகச் சோறு வேண்டாம். வேலை எதாவது தாருங்கள். நாங்கள் உழைத்துவிட்டுச் சோற்றைச் சாப்பிடுகிறோம் என்றார்களே. அந்த உணர்வுதான் அவர்கள் நாட்டையே உயர வைத்தது.

வியர்வைத் துளிகளும், கண்ணீர்த் துளிகளும் உப்பாக இருக்கலாம். ஆனால், அவைதான் வாழ்க்கையை இனிப்பாக மாற்றும் என்றார் முன்னாள் ஜனாதிபதி மேதகு கலாம் ஐயா.

அரசாங்க வேலை கிடைத்தால் போதும், அமைதியாக வாழ்க்கை நடத்திவிடலாம் என்பவர்களே நிச்சயம் உழைப்பவன் வாழ்க்கைதான் ஜொலிக்கும் என்பதற்கு ஓர் உதாரணம். சோனி எலக்ட்ரானிக்ஸ் பொருட்கள். கடற்படை வேலையாக இருந்தாலும் என் உழைப்பை உலகம் அறிய வேண்டும் என ஜப்பானில் 'அகியோ மொரிடா' எண்ணியதால் இன்று நமக்கு சோனி பன்னாட்டு நிறுவனம் கிடைக்கப் பெற்றது.

"அனைத்து வலிமையும் உன்னுள் இருக்கிறது. நீ நினைத்தால் எங்கு வேண்டுமானாலும், எதை வேண்டுமானாலும் செய்யலாம்" என்ற சுவாமி விவேகானந்தரின் அறிவுரையை ஜப்பானியர் ஏற்றுக் கொண்டார்கள். நாம்தான் இன்னமும் யோசித்துக் கொண்டே இருக்கிறோம்.

"சும்மா இருக்கும் போது சாதிக்கணும்னு நினைச்சா தப்பில்லை. ஆனால், சாதிக்கணும்னு நினைச்ச பிறகு சும்மா இருக்கிறதுதான் தப்பு. ஓர் இளைஞனைப் பார்த்து தம்பி.... இப்போது என்ன செய்து கொண்டு இருக்கிறாய் என்று கேட்டேன். அவனும் பதிலுக்கு அப்பாவுக்கு உதவியாக இருக்கிறேன் என்றான். சரி தம்பி, அப்பா என்ன செய்கிறார் என்றேன். அவன் பதிலைக் கேட்டவுடன் என் நெஞ்சில் சம்மட்டியால் அடித்தது போன்ற உணர்வு. ஆம் – அவனது அப்பா சும்மாதான் இருக்கிறார் என்றான்.



ஓடிக் கொண்டே இரு! முடியாவிட்டால் நடந்துகொண்டு இரு! அதுவும் முடியாவிட்டால் படுத்துக்கொண்டு காலை ஆட்டிக் கொண்டு இரு! இல்லையேல், உன்னைப் பிணம் என்று அடக்கம் செய்து விடுவார்கள் என்கிறார் மார்டின் லூதர் கிங்.

ஓய்வைத் தேடும் பெரியோர்களே! உழைப்பு என்பது இளைஞர்களுக்கு மட்டும் சொந்தமான வார்த்தையல்ல. அனைவருக்கும்தான். உங்களுக்குத் தெரியுமா? தந்தை பெரியாருக்கு வயது தொண்ணூற்றி ஐந்துஆனபொழுது சிறுநீர் நிற்காமல் தானே போகும் நிலை இருந்தது. பொதுக்கூட்ட மேடையில் பக்கத்தில் பக்கெட் வைத்து சிறுநீர் அதில் செல்லுமாறு அமைத்துக் கொண்டு பல மணிநேரம் பேசுவார். அவர் ஒருபொழுதும் ஓய்வுக்கு இடம் அளித்ததில்லை. தமிழ் மக்களிடையே இருந்த சமுதாய இழிநிலைகளையும், மூடநம்பிக்கைகளையும் அகற்ற அயராது உழைத்துக்கொண்டே இருந்தார்.

உழைப்பவன்தான் தன் உடலையும் ஆராக்கியமாக வைத்துக் கொள்ள முடியும். தம் ஊரையும் வளமாக வைத்துக்கொள்ள முடியும். பலர் உழைப்பதால்தான் இந்த உலகம் செம்மையாக இயங்கிக் கொண்டிருக்கிறது.

இளைஞர்களே! உழைப்பு என்பது தலையில் பாரம் சுமப்பது மட்டுமல்ல. நாட்டின் தலைமைப் பொறுப்பை ஏற்று நடத்துவதும்கூடத்தான். நம் நாடு செழிக்க உழைக்கத் தயாராகுங்கள். நல்ல சிந்தனையும், உழைப்பும் ஒன்று சேரும்போதுதான் நல்லதொரு பலனை அடையமுடியும்.

கோயிலில் ஊற்றும் புனிதநீரை விட உழைப்பாளர்களின் வியர்வை நீர் புனிதமானது என்கிறார் சுவாமி விவேகானந்தர். உற்சாகமான மனம்தான் உழைப்பைத் தேடுகிறது. உழைப்புதான் உயர்வைத் தருகிறது. எனவே, என்றுமே உற்சாகத்தோடு நம் மனதை வைத்துக்கொண்டு உழைக்கக் கற்றுக் கொள்வோம்.

உழைக்காமல் இருந்தால் இரும்புகூட துருப்பிடித்து விடுகிறது. நம் உடல் மட்டும் விதிவிலக்கா என்ன? உழைக்கிறோம். ஒரு புத்தகத்தில் எழுத்தாளனின் உழைப்பைக் கழித்துவிட்டால் வெறும் பேப்பர். டேபிளில் ஆசாரியின் உழைப்பை எடுத்துவிட்டால் வெறும் மரம்தான். அழகான வீட்டில் போயரின் உழைப்பைக் கழித்துவிட்டால் கல்லும் மண்ணும்தான். உடுத்தும் ஆடையில் டெய்லர் மற்றும் நெசவாளியின் உழைப்புகளை எடுத்துவிட்டால் வெறும் பஞ்சுதான். எனவே, நாம் உலகத்தில் நமக்கென்று ஒரு தொழிலைப் பிடிப்போம். அந்தத் தொழிலின் உழைப்பால் உயர்வோம்!

"உப்பிட்டவரை உள்ளளவும் நினைப்பார்கள். ஆனால், உழைப்பால் உயர்ந்தவர்களை உலகம் உள்ளவரைப் போற்றுவார்கள்", இதுவும் சாத்தியம்.


●●●

ப(யிற்)சி 3

பசி இருந்தால்தான் வயிற்றுக்கு உணவு உண்ண முடியும். அதுபோல, நல்ல பயிற்சி இருந்தால் தான் வாழ்க்கையில் உணர்வுகொள்ள முடியும். பணியிலோ அல்லது வேறு எந்தச் செயலிலும் வெற்றிபெற்று உயரப் பறப்பதற்கு சிறகுகளாக உதவுபவை. அவை மீது நீங்கள் காட்டும் ஆர்வமும், அதற்காக நீங்கள் எடுக்கும் பயிற்சிகளுமே. தவிர வேறொன்றுமில்லை. நாம் இடைவிடாத பயிற்சிகளின் மூலம் கஷ்டங்களைத் தவிர்த்து இஷ்டங்களை அடைய முடியும்.

ஒரு சிறுவன், தீராத கலைப்பசி இருந்தது அச் சிறுவனுக்கு. அத்தோடு உடற்பயிற்சி, பாடல் பயிற்சி, வசனம், நடிப்புக்கான பயிற்சி என அத்தனை பயிற்சிகளையும் கற்றுக் கொண்டான். விளைவு, கலைத்தாயின் தவப்புதல்வனாகத் திகழ முடிந்தது. ஆம்! இடைவிடாது பயிற்சிகளைத் தொடர்ந்து பயின்று வந்ததும் நடிப்பின் மீது கொண்ட ஆர்வமும்தான் நடிகர் திலகமாக சிவாஜியால் திகழ முடிந்தது. நீயும் உன் பதவிக்கேற்ற தொழிலை நல்ல பயிற்சியின் மூலம் சிறப்பித்துக் கொண்டால் சிவாஜி என்ன.., நீயும் ஒரு சிகரம்தான்.

“பயிற்சியும், முயற்சியும் தொடர்ச்சியாக இருந்தால், சாதாரண மனிதனும் ஒரு சாதனையாளன் ஆகமுடியும் என்கிறார் கவிதாசன் அவர்கள். உயர் வெற்றிகளைப் பெறுவதற்கு பயிற்சியும், அதற்கேற்ற தொடர் விடாமுயற்சியும் மேற்கொள்ளுதல் அவசியம். அரைகுறையாகக் கற்றால் எதிலும் முழுவெற்றி பெற முடியாது. அரைக்கிணறு தாண்டுபவர்கள் நிச்சயம் உள்ளே விழுந்துவிடுவார்கள். அதாவது, அரைகுறைத் தகவல்களை வைத்து, அரைகுறைப் பயிற்சிகளை வைத்து ஒரு தொழில்



செய்வது என்பது முழுமை பெறாத செயலாகும். எந்தவொரு பணியாக இருந்தாலும், நீங்கள் நன்கு பயிற்சி எடுத்துக்கொண்டு அதில் ஈடுபட்டால் வெற்றியும் கிட்டும். இந்த உலகமும் பாராட்டும். பயிற்சி எடுப்பதற்கு சிறு செலவு ஆனாலும் வருத்தப்படக்கூடாது. வருமானத்திலிருந்து சிறிய தொகையை பயிற்சிக்காக ஒதுக்குவது என்பது நம் வெற்றிக்காக செய்யும் மூலதனமேயாகும்.

சுவாமி விவேகானந்தர் 'இந்த உலகம் மிகப்பெரிய உடற்பயிற்சிக் கூடம். இங்கு நாம் நம்மை வலிமை உடையவர்களாக்கிக் கொள்ளவே வந்திருக்கிறோம்' என்கிறார். உலகம் என்றும் வலிமையுடையவர்களுக்கே சொந்தமாக இருக்கிறது. Might is Right என்பர். ஆகவே, உலகை உன்னுடையதாக்க (பயிற்சி) முயற்சி செய்.

மிகப்பெரிய சாதனை புரிந்த எவருமே பிறக்கும்போதே சாதனையாளராகப் பிறந்துவிடுவது இல்லை. நீண்டகாலப் பயிற்சியுடன் கடினமாகவும், அக்கறையுடனும் உழைத்த பிறகுதான் அவர்கள் ஒரு உயர்ந்த நிலையினை அடைந்திருப்பார்கள். சாதாரண டர்னர் வேலை செய்தவர் மிகப்பெரிய மோட்டார் பம்ப்செட் தயாரிப்பாளராக உயர்ந்துள்ளார். லாரி டிரைவராகப் பணியில் சேர்ந்த ஒருவர், டிரான்ஸ்போர்ட் கம்பெனியின் உரிமையாளராக உயர்ந்துள்ளார். ஒரு காலத்தில் மற்றவர்கள் முன்பு பேசக்கூட பயப்பட்டவர் பட்டிமன்றத்தில் பறந்து பறந்து பேசுகிறார். ஏன்? கண்ணே இல்லாதவர் தொட்டுத் தொட்டு உணர்ந்து ஒவ்வொரு பொருளின் பெயரையும் சரியாகக் கூறும் திறமையைப் பெறுகிறார். இவர்களெல்லாம் தத்தம் துறைகளில் வெற்றி அடைந்தே தீரவேண்டும் என்ற பசி (தீராத வேட்கை) அதற்காக அவர்கள் எடுத்துக்கொண்ட நல்ல பயிற்சியும், அத்துறைக்குத் தேவையான அறிவைக் கற்றுக்கொண்ட திறமையும்தான் அவர்களை உயர்வடைய வைத்திருக்கிறது.

எவர் ஒருவர் தான் கற்றுக்கொண்ட அறிவையும், பிறகு எடுத்துக்கொண்ட பயிற்சியையும் வைத்து அவர் செய்யும் தொழிலில் வெற்றி பெறுகிறாரோ அவரே சாதனையாளராவர். சிறுவயதில் மூங்கில் குச்சியில் கல்லைக் கட்டி பளுதூக்கும் பயிற்சியை மேற்கொண்டதால் அவரால் பின்னாளில் ஒலிம்பிக் போட்டியில் பதக்கம் வென்று சாதனை படைக்க முடிந்தது. ஒலிம்பிக் போட்டியில் தனிநபர் பிரிவில் இந்தியாவின் சார்பில் பதக்கம் பெற்ற முதல் பெண் என்ற பெருமையும் கர்ணம் மல்லேஸ்வரிக்குக் கிடைத்தது. அதற்குக் காரணம் அவரிடம் இருந்த தன்னம்பிக்கை, விடாமுயற்சி, இவற்றுக்கும் மேலாக அவர் எடுத்துக்கொண்ட பயிற்சி இவைகளேயாகும்.

நல்ல உடற்பயிற்சி செய்து வந்தால் நல்ல ஆரோக்கியம் நமக்குக் கிடைக்கும். நல்ல மனப்பயிற்சி செய்து வந்தால் வலிமைமிக்க . மனம் அமையும். ஒரு கவிஞன் கூறுகையில் 'இமயத்தை இடுப்பில் கட்டி இழுப்பேன் என்ற இதயம் வேண்டும்' என்கிறார். அப்படிப்பட்ட வலிமையான இதயம், நம்பிக்கை எல்லாம் நம் மனதைப் பயிற்சியின் மூலம் பக்குவப்படுத்தினால் கிடைக்கப் பெறலாம்.

அறிஞர் அண்ணா கூறிய 'எதையும் தாங்கும் இதயத்தைப் பெற்றுவிட்டால் எதையும் எளிதில் வென்றுவிடலாம்'. ஒரு மனிதனுக்கு பயிற்சி கட்டாயம் தேவை' என்கிறார் ஸ்ரீரமண மகரிஷி. குருவிடம் எடுக்கின்ற பயிற்சி, அதைத் தொடர்ந்த விடாமுயற்சி இவையே நம்மை முழு மனிதனாக்கும்.



சேஷாசலம் என்கின்ற மாணவனுக்கு 18 வயதுவரை திக்குவாய். நல்ல கவிதைப் புலமையும், நன்கு பேச வேண்டும் என்கின்ற ஆர்வமும் நிறைந்திருந்தது. ஆனால், அவர் திக்குவாய்க்காரனாக இருக்கும்போதே சரளமாகப் பேசுவது மட்டு



மில்லாது பேச்சுத்துறையில் தன்னிகரில்லாத இடத்தைப் பிடிப்பதே இலட்சியம் என்றிருந்தார். அவருடைய நம்பிக்கை, எடுத்துக்கொண்ட பயிற்சி, கடின உழைப்பு இவையினால் அன்று திக்குவாய் சேஷாசலமாக இருந்த மாணவன், இன்று தமிழகத்தின் தலைசிறந்த பேச்சாளராக பேராசிரியர் பெரியார்தாசனாக உயர்ந்திருக்கிறார்.

உண்ணும் துறையிலிருந்து உலகில் உள்ள அனைத்துத் துறைகளுக்கும் பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகின்றன. நமக்கு எந்தத்துறை பொருத்தமாக இருக்கும் என்பதை முதலில் தேர்வு செய்து கொண்டு அத்துறையில் நன்கு பயிற்சி எடுத்துக் கொண்டால் வெற்றி என்பது மிக எளிதாகிவிடும்.

மனிதனுக்குப் பசி என்பது இன்றியமையாதது. பசி எடுத்தால் உணவைத் தேட வேண்டும். உணவு வேண்டுமெனில் பொருள் தேவைப்படும். பொருள் வேண்டுமெனில் ஏதாவது ஒரு தொழில் செய்தாக வேண்டும். அத்தொழிலில் வெற்றிபெற வேண்டுமெனில் தொழில் சார்ந்த கூடுதல் தகவல்களைப் புத்தகங்களிலும், பத்திரிகைகளிலும், பயிலகங்கள் மூலமாகவும் நன்கு தெரிந்துகொண்டு பயிற்சிகளை மேற்கொண்டால் வாழ்க்கையில் பசியையும் போக்கலாம். நல்ல வெற்றிகளையும் எளிதாகப் பெறலாம். வாழ்வில் பன்மடங்கு உயரலாம். இதுவும் சாத்தியம்.

●●●

4. ப(யb)ணம் 4

நடுக்கடலுக்குப் பயணம் செய்து, தண்ணீர் மொண்டாலும் நாம் எந்தப் பாத்திரத்தில் மொள்ளுகிறோமோ, அந்தப் பாத்திர அளவுதான் தண்ணீர் தேறும். அதைப்போல நாம் எந்த அளவிற்கு அறிவு சார்ந்த உழைப்பிற்கு தயார் செய்திருக்கிறோமோ, அந்த அளவிற்கே நமக்குப் பணம் வந்து சேரும். நம் அறிவிற்கும், திறமைக்கும், உழைப்பிற்கும் ஏற்றாற்போல் நம்மால் பணம் சம்பாதிக்க முடியும். பணம் சம்பாதித்தால்தான் நாம், நமது வாழ்க்கையை வளமாக்கிக் கொள்ள முடியும்.

"அருளில்லார்க்கு அவ்வுலகம் இல்லை பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லாங்கி யாங்கு" - (குறள் 247)

திருவள்ளுவரே, பொருள் இல்லையென்றால் இவ்வுலகமே இல்லை என்கிறார். வாழ்வின் அனைத்து வசதிகளையும் பெற, நம் குழந்தைகளுக்கு உயர்ந்த கல்வி, பெரியோர்களுக்கு சிறந்த மருத்துவம், அனைவருக்கும் நல்ல பாதுகாப்பு, அத்தியாவசியமான உணவு, உடைகள், அதற்கும் மேலாக சமூக அங்கீகாரம், இவைகளைப் பெறுவதற்கு பணம் முதற்காரணியாகிறது. ஆகவேதான், அப்படிப்பட்ட பணத்தைப் பெற நாம் எவ்வாறு பயணம் மேற்கொள்ள வேண்டும் என்பதை யோசியுங்கள். நீங்கள் நடந்த, பயணித்த பாதை இல்லையே என்று கவலைப்படாதீர். நீங்கள் நடந்தால் அதுவே பாதையாகும். ஒவ்வொரு மனிதனும் அவரவர் வாழ்க்கையில் சொந்தத் தொழில் செய்தோ, அதாவது ஒரு பொருளை உற்பத்தி செய்தோ, உற்பத்தி செய்த பொருளை விற்பனை செய்தோ, ஒரு நிறுவனத்தில் (அதிகாரியாகவோ அல்லது தொழிலாளியாகவோ) வேலைக்குச் சேர்ந்தோ, டாக்டர், இன்ஜினியர், வக்கீல், கன்சல்டண்ட் போன்ற எந்தத் தொழிலாக

இருந்தாலும், அந்தத் தொழிலைத் தேர்ந்தெடுத்து ஈடுபாட்டுடன் ஒவ்வொரு நாளும் செய்துவந்தால் நிறையப் பணமும், அதன் விளைவாக நிம்மதியும் வரும் என்கிறார் ஒரு அறிஞர்.


"You think and do which you love, the money will follow.".

அதாவது எதை நீங்கள் விரும்பிச் செய்கிறீர்களோ, அதன் விளைவாக ஒரு மனிதன் வாழ்க்கையில் எப்படியெல்லாம் இருக்க வேண்டுமோ, என்னவெல்லாம் அடைய வேண்டுமோ, அதற்கு முக்கியக் காரணியான பணத்தைப் பெறுவதற்கான பயணத்தைத் தொடங்க வேண்டும்.

நாம் எங்கே இருக்கிறோம்? இன்னும் நாம் எங்கே போய்ச் சேர வேண்டும்? அங்கே போய்ச் சேர என்ன செய்ய வேண்டும்? என்கின்ற தெளிவு பிறந்துவிட்டால் போதும், அதற்குப் பிறகு அந்தப் பணத்தை அடைவதற்குரிய தொழிலைத் தேர்ந்தெடுத்துவிடலாம். பின்னர், அத்தொழிலைப் பற்றிய பயிற்சியையும், தொழில் நுணுக்கங்களையும், கண்டறிந்து தொடர்ந்து உழைத்துக் கொண்டிருந்தால் பணம் நம்மைத் தேடிவரும்.

அடுத்து நமது எண்ணப் பயணம், நிறையப் பணம் சம்பாதித்தவர்களைப் பற்றியே வட்டமடிக்க வேண்டும். அவர்கள் எப்படி சம்பாதித்தார்கள்? அவர்களைப் போல சம்பாதிப்பதற்கு என்ன வழி? என்று உங்களையே கேள்வி கேட்டுக் கொண்டிருந்தால்தான் வெற்றிபெற முடியும். "இந்தத் துறையில் இறங்கி லாபம் சம்பாதிக்கலாம் வா என்று உங்களை யாரும் அழைக்கப் போவதில்லை. அந்த முதல் அடியை நீங்களாகவேதான் எடுத்து வைக்க வேண்டும்" என்கிறார் இந்தியாவின் தலைசிறந்த கோடீஸ்வரர்களில் ஒருவராக இருந்த திருபாய் அம்பானி.


அவர் சிறுவனாக இருந்தபோது கிர்னர் மலையடிவாரத்தில் பஜ்ஜியும், போண்டாவும் விற்றுப் பிழைப்பு நடத்தி வந்தார். ஆனால், மனதில் தோன்றிய இலக்கோ, நிறையப் பணம் சம்பாதிப்பது மட்டுமே. அதை அடைவதற்குத் திரைகடல்



ஓடியும் திரவியம் தேடினார். பின்னாளில் தன் உழைப்பாலும், திறமையாலும் உலகமே வியக்கும் தொழிற்சாலைகளுக்குச் சொந்தமானார். பெட்ரோல் பங்கில் சிறுவயதில், வண்டிகளுக்குப் பெட்ரோல் அடித்த சிறுவன், பெட்ரோல் பங்குகளுக்கே எரிபொருளை விநியோகித்துக் கொடுக்கின்ற நிலைமைக்கு மாறினார். அதற்கு அச்சிறுவனிடம் இருந்த ஆசையும், ஆர்வமும், கடின உழைப்பும் தான் காரணம். அவைகள் உங்களிடம் இருந்தால் நீங்களும் இந்தியாவின் அடுத்த அம்பானிதான். ஏழையாகப் பிறந்தது உன் தவறு அல்ல. ஆனால், ஏழையாக இருப்பதும், இறப்பதும்தான் உன் தவறு என்கிறார் உலக கோடீஸ்வரர்களில் ஒருவரான பில்கேட்ஸ். ஏழ்மை ஒரு பொருட்டு அல்ல, வறுமையை மாற்றக் கற்றுக் கொள்ளுங்கள். உலகில் மாற்றம் ஒன்றே மாறாதது. எது நமக்கு உடன்படுகிறதோ அதை எடுத்துக்கொள்ளுங்கள். உடன்படாததை உடனே மாற்றிக்கொள்ளுங்கள்.

ஒரு நிறுவனத்தில் பணிபுரிபவர்களோ அல்லது தொழில்புரிபவர்களோ, யாவருமே தத்தம் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதற்காக நிறைய பயணித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். ஆனால், எதுவுமே கிடைத்தபாடில்லை என்கிறீர்களா? நண்பர்களே! நீங்கள் தேடுகின்ற இடத்தில் கிடைக்கவில்லை என்றால், முயற்சியை சிறிதும் கைவிடாது, இடத்தை சற்றே மாற்றி, கிடைக்கின்ற இடத்தில் தேட ஆரம்பியுங்கள். நிச்சயம் வெற்றியைப் பெறலாம்.

300 ஆண்டுகளாக சேக்பானம் தயாரிக்கும் தொழிலில் ஈடுபட்டிருந்த மொரியா என்ற புகழ்பெற்ற நிறுவனத்தில் கிடைக்காத சிறப்பை, புதிய சோனி எலக்ட்ரானிக்ஸ் என்ற



நிறுவனத்தை நிறுவி பணமும், புகழும் அடைந்த அகியோ மொரிடோ கூறுகிறார். "நமக்குப் பிடித்த தொழிலாகவும், அதைச் செய்யச் செய்ய நமக்கு சந்தோசமே தரக்கூடியதாகவும், ஆத்ம திருப்தியைத் தரக்கூடியதாகவும், நம் திறமைகளை முழுமையாக வெளிப்படுத்துகிற தொழிலாகவும் எது இருக்கிறதோ அதைத் தேர்ந்தெடுத்தால் பணமும், புகழும், திருப்தியும் நம்மைத் தேடிவரும்" என்கிறார்.

பெற்றோர்களுக்காகவும், மற்றவர்களுக்காகவும் சமுதாயத்திற் காகவும் நமக்கு இஷ்டமில்லாததைச் செய்யக்கூடாது. மீறிச் செய்தாலும் நாம் நினைத்த வெற்றி கிடைக்காமல் போகலாம். பணம் இருந்தால் இன்றைய சூழ்நிலையில் எல்லாமும் வந்துவிடும், இல்லையென்றால் இல்லாளும்கூட வெறுத்து ஒதுக்கிவிடக்கூடும்.

"இல்லாரை எல்லோரும் எள்ளுவர் செல்வரை
எல்லோரும் செய்வர் சிறப்பு."

பொருள் இல்லாதவரை வேறு நன்மை உடையவராக இருந்தாலும் எல்லோரும் இகழ்வர். செல்வரை நன்மை ஏதும் செய்யாவிட்டாலும் எல்லோரும் சிறப்புச் செய்வர். இது அன்று மட்டுமல்ல, இன்றுமே நம்மிடம் அதிகம் காணக்கூடிய

செயலாகும். ஆகவே, பணம் நமது வாழ்வின் அடிப்படைத் தேவையாகிறது. அதனால் பணத்தைத் தேடுகின்ற பயணம் இன்றியமையாதது. அதனால்தான் சில மக்கள் நாடுவிட்டு நாடும், கண்டம் விட்டுக் கண்டமும் பயணம் மேற்கொள்கிறார்கள்.

உலகமென்பது ஒரு பாற்கடல். உங்களுக்கு நிறைய வெண்ணெய் வேண்டுமென்றால், நிறையக் கடைந்து எடுங்கள் என்கிறார் இந்தியக் கோடீஸ்வரர் பிர்லா. எனவே, உங்களுடைய அறிவையும், திறமையையும் வைத்துக் கடினமாக உழைத்தால் (கடைந்தால்) உங்களுக்குத் தேவையான பணம் (வெண்ணெய்) கிடைக்கும். இதுதான் உண்மை. நம்மிடம் மறைந்துள்ள மாபெரும் ஆற்றலைப் பயன்படுத்தி பிரபஞ்சம் முழுதும் நிரம்பியுள்ள அளவற்ற செல்வத்தில் எவ்வளவு பெறமுடியுமோ, அவ்வளவையும் பெற்று சந்தோசத்தைப் பெறுவோம். அச்செல்வத்தைக் கொண்டு அனைவருக்கும் சந்தோசத்தைக் கொடுக்கலாம். இதுவும் சாத்தியம்.

●●●

5 க(ல்)வி

"கல்வி இல்லாத பெண் களர் நிலம். அங்கு புல் விளைவதுண்டு. நல்ல புதல்வர்கள் விளைவதில்லை என்றார் பாரதிதாசன்.


சமுதாயத்திற்கு நல்ல இளைஞர்களை உருவாக்க வேண்டும் என்றால் முதலில் பெற்றோர்கள் அறிவுள்ளவர்களாக இருக்க வேண்டும்.

"அருளில்லார்க்கு அவ்வுலகம் இல்லை. பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை. அறிவில்லார்க்கு எவ்வுலகமும் இல்லை" என்கிறார் ஒரு புதுக்கவி.

ஆக, அறிவை நாம் எங்கு பெறுவது, எப்படி ஈட்டுவது என்பது பற்றிய நினைவு வருகின்றபோதுதான் நாம் எந்த நிலையில் இருக்கின்றோம் என்பது தெரியவருகிறது. ஆராய்வதும், சந்திப்பதும் மனிதனின் உரிமை மட்டுமல்ல. உயர்ந்த கடமையுமாகும் என்கிறார் இங்கர்சால். ஆம்.... "கல்வி என்பது மதிப்பெண்களுக்காக கற்பது அல்ல. அது மதிப்பான எண்ணங்களுக்காக கற்பதுவேயாகும்."

படிப்பு என்பது அன்றாடம் நாம் செய்ய வேண்டியவைகளுள் ஒன்று. அதை வேண்டுமென்றால் எந்த நேரத்திலும் கற்கலாம். கற்றதை வைத்து அறிவைப் பெருக்கலாம். ஒருமுறை சாக்ரட்டீஸ் தன் நண்பனிடம் தன்னைப் பற்றி ஏதாவது சொல்ல வேண்டும் என்று நினைத்தீர்களானால் அவர் புத்தகம் படித்துக் கொண்டே இறந்தார் என்று சொல்லுங்கள் என்றார்.

ஆம். சாக்ரட்டீஸ் நஞ்சு கொடுக்கும் வரை படித்தார். அம்பேத்கர் படுக்கின்ற இடம் கூட படிப்பறையாக இருக்க வேண்டும் என்றார்.



பகத்சிங் தூக்குமேடை ஏறும்வரை படித்தார்.

பிளேட்டோ படிக்காமல் இருப்பதற்குப் பிறக்காமலே இருந்திருக்கலாம் என்றார்.

பண்டித நேருவோ பயணத்தின்போதெல்லாம் படித்தார்.

பேரறிஞர் அண்ணாவோ தன் கடைசி பயணம் வரை படித்தார். எல்லோருமே படித்தால்தான் உயரமுடியும் என்று உணர்த்தியிருக்கிறார்கள்.

சுவாமி விவேகானந்தர் இளைஞர்களுக்கு மூன்று உபதேசங்களைக் கூறினார். ஒன்று, படிக்க வேண்டும். இரண்டு, நன்றாகப் படிக்க வேண்டும் மூன்று, மிக நன்றாகப் படிக்க வேண்டும் என்பதுவே. ஆக, இளைஞர்கள் நன்கு படித்து நல்ல வேலை வாய்ப்புகளைப் பெறவேண்டும். இளைஞர்களுக்கு கற்கும்போது பொருளாதாரப் பிரச்சனையைத் தவிர வேறு பிரச்சனைகள் வர வாய்ப்பு இல்லை. அதையும் அரசாங்கத்தின் உதவித்தொகை மூலமும், சில அறக்கட்டளைகளின் கல்விக்குழு அளிக்கும் சிறப்புத் தொகை மூலமும் சரிசெய்து நாம் நினைக்கின்ற இலக்கை அடைந்தே தீர வேண்டும் என்று முடிவு செய்யுங்கள்.

"கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே"

நாம் பிச்சை எடுத்தாகினும் படித்தே தீர வேண்டும் என்கிறது நறுந்தொகைப் பாடல். ஆகவே, எக்காரணத்தைக் கொண்டும் படிப்பை இடையில் நிறுத்தாதே. "படிப்பை இழந்தால் நீ சமுதாயத்தின் பார்வையில் கண் இருந்தும் குருடனாகி விடுவாய். படிப்பு இருந்தால்தான் நீ அதன்மூலம் அறிவையும்,